


எழுபதுகளின் தொடக்கத்தில் ஆரம்பித்து அந்தப் பத்து வருடங்களும் இ.டி.ஏ. ஸ்பெயினில், முக்கியமாக மாட்ரிட் நகரில் வைத்த குண்டுகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் மிகவும் போரடித்துவிடும். கிட்டத்தட்ட நாற்பத்திரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களை அவர்கள் அந்தப் பத்தாண்டு கால அவகாசத்தில் நிறைவேற்றினார்கள். ஒவ்வொரு குண்டுக்கும் ஒரு குறிப்பிட்ட காரணம் இருக்கும் என்றால் கூடப் பேசலாம். அதுவுமில்லை. கொக்குக்கு ஒண்ணே மதி. இ.டி.ஏ.வுக்கு பாஸ்கே பிரதானம். எல்லாம் சாதாரண குண்டுகள். சில சமயம் இழப்பு அதிகமிருக்கும். சில சமயம் குறைவாக இருக்கும். அவ்வளவுதான் வித்தியாசம்.

ஆனால், டிசம்பர் 20, 1973 அன்று அவர்கள் அரங்கேற்றிய அந்தப் பாவப்பட்ட பிரதம மந்திரி லூயி கரீரோ பிளாங்கோவின் படுகொலை, இ.டி.ஏ.வின் மீதான அச்சத்தைப் பல மடங்கு உயர்த்திவிட்டது. இந்தக் கொலையை இப்போது மீண்டும் விவரிக்க வேண்டாமல்லவா? இ.டி.ஏ. காவியத்துக்குப் பாயிரம் மாதிரி பத்து இதழ்கள் முன்னால், ஏற்கெனவே பார்த்ததை இங்கே நினைவுபடுத்திக்கொண்டு விடலாம். கார்ப்பரேஷன்காரர்கள் மாதிரி பாலத்துக்கு அடியில் குழிதோண்டி, காரை வெடிக்கவைத்து, கனவானை கர்த்தருடன் இணைத்த கதை.

அது யாரும் எதிர்பாராதது. எதிர்பார்க்கவும் முடியாது. ஒரு பிரதமரைப் போட்டுத்தள்ளுவது என்பது அத்தனை சுலப சாத்தியமல்ல. எழுபதுகளில் அத்தனை பெரிய முயற்சியை வேறு எந்த இயக்கமும் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ஐரோப்பாவில் மட்டுமல்ல. உலகெங்கிலும் கூட. ஆனால், இ.டி.ஏ. சாதித்தது. படு சுலபமாக. அநாயாசமாக. கொன்று வீசிவிட்டு, தட்டிக்கொண்டு போயே விட்டார்கள். வழக்கெல்லாம் நடந்தது. போலீஸ்காரர்களே பேசிக்கொண்டு கலைந்ததுடன் சரி. சம்பந்தப்பட்டவர்கள் யாரையும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒப்புக்குப் பத்துப் பேரைப் பிடித்து இ.டி.ஏ.க்காரர்கள் என்று கோர்ட்டில் நிறுத்தி என்னவோ விசாரித்து, ஏதோ தண்டனை கொடுத்தார்களே தவிர, மறைந்த பிரதமரின் ஆன்மா சாந்தியடையும் விதத்தில் ஏதும் நடந்தபாடில்லை.

அதன்பிறகு, மாதம் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று என்று பல்வேறு இடங்களில் குண்டு வைத்துக் கொண்டே இருந்தார்கள். எண்பத்தைந்தாம் ஆண்டு வரைக்கும் சற்றும் சலிக்காமல் வைக்கப்பட்ட குண்டுகள் அவை. எதற்காக அம்முயற்சிகள் என்பதற்கு இன்றுவரை சரியான விடை இல்லை. ஆனால், வைத்தார்கள். பல சிவிலியன்களும் சில ராணுவ / போலீஸ்காரர்களும் இறந்தார்கள். ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் சில அரசு உயரதிகாரிகளும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால், மாபெரும் அதிர்ச்சி ஏற்படுத்திய சம்பவமாக ஏதும் அமையவில்லை.

எண்பத்தைந்தில்தான் இ.டி.ஏ.
தன் கவனத்தைச் சற்று மாற்றியது. மத்தியக் கிழக்கில், குறிப்பாக, பாலஸ்தீனில் ஹமாஸ் அப்போது மிகத் தீவிரமாக கார் குண்டுகள் வைத்துக் கொண்டிருந்தது. தூரத்தில் தென்கிழக்கே இலங்கையில்

மனித குண்டுகள் சில வெடிக்கத் தொடங்கியிருந்தன. இதையெல்லாம் இ.டி.ஏ. கவனித்தது. வெறும் குண்டுகள், நாலைந்துபேர் படுகொலை என்பது அவர்களுக்கே அப்போது போரடித்துவிட்டிருக்கிறது போலிருக்கிறது. கொஞ்சம் ரூட்டை மாற்றிப் பார்க்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

தவிரவும் ஐரோப்பிய கலாசாரத்தில் அதுநாள் வரை கார் குண்டுகள் இருந்ததில்லை. மக்களுக்குப் பரிச்சயமில்லை என்பது ஒரு புறமிருக்க, இயக்கங்களுக்கே அதெல்லாம் தெரியாது. சின்னதாக நாலைந்து ஜெலட்டின்கள் வைப்பதுண்டு. எப்போதாவது ஆர்.டி.எக்ஸ். பெரும்பாலும் துப்பாக்கி முனை. அதுவும் இயந்திரத் துப்பாக்கிகள் அதிகமில்லை. பாக்கெட் சைஸ் துப்பாக்கிதான். ஜேம்ஸ்பாண்ட் படங்களில் காட்டப்படுவது மாதிரி. அதுவே போதுமானதாகத்தான் இருந்திருக்கிறது.

இ.டி.ஏ. கார் குண்டுகளை ஸ்பெயினுக்கு அறிமுகப்படுத்தலாம் என்று முடிவு செய்ததும் தனது வீரர்கள் சிலரைப் பயிற்சிக்காக உக்ரைனுக்கு அனுப்பியது. கிலோ கணக்கில் வெடிமருந்துகளைத் தயார் செய்து, அதைப் பாதுகாப்பாக ஒரு சிலிண்டர் அல்லது கேனில் அடைத்து, காரில் வைத்து ரிமோட் மூலம் வெடிக்கச் செய்வதற்கான பயிற்சி அது.

உக்ரைனில் அவர்களுக்கு யார் பயிற்சியளித்தார்கள், அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன மாமன் மச்சான் உறவு என்பதெல்லாம் இன்றுவரை தெரியவில்லை. பழைய சோவியத் யூனியனின் வால்களுள் ஒன்று உக்ரைன் என்பதையும், இ.டி.ஏ. தன்னை ஒரு மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் இயக்கம் என்பதையும் மட்டும் சம்பந்தப்படுத்தி ஒருவாறு உறவுநிலையை விளங்கிக் கொள்ளலாம்.

வெளியில் தெரிந்த தகவல்படி, இ.டி.ஏ.வின் இருபத்தைந்து வீரர்கள் இதன்பொருட்டு 1984-ம் ஆண்டின் இறுதியில் உக்ரைனுக்குச் சென்றிருக்கிறார்கள். எப்போது பயிற்சி முடிந்து திரும்பி வந்தார்கள் என்பது தெரியாது. ஆனால், அவர்களது முதல் கார் குண்டு வெடிப்புச் சம்பவம் 1985-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அரங்கேறியது.

மாட்ரிட் நகரில் ஒரு பெரிய மருத்துவமனைக்கு எதிரே ஒரு வேனில் குண்டு நிரப்பிய சிலிண்டரைப் பொருத்திக் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, நூற்றைம்பது அடி தொலைவில் போய் நின்று கொண்டார்கள். யாரோ அரசியல்வாதி ஒருவர் அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக (நம்மாட்கள் மாதிரி ஹார்ட் அட்டாக்கெல்லாம் இல்லை. என்னவோ ரெகுலர் செக்கப்.) சேர்ந்திருந்ததை ஒட்டி நிறைய செக்யூரிடி ஆட்கள் நடமாட்டம் இருந்தது. பல பிரமுகர்கள் அடிக்கொருதரம் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். சரி, பரிசோதனைக்கு வைக்கிற குண்டானாலும் பத்திருபது பேர் பரலோகம் போய்ச் சேர்ந்தால் நல்லதுதானே என்று நினைத்தார்களோ என்னவோ. குண்டுக்காரை நிறுத்திவிட்டுத் தொலைவில் போய் நின்று கொண்டார்கள்.

ஒன்று. இரண்டு. மூன்று. எண்ணிவிட்டு ரிமோட்டை அழுத்த, வெடித்த கார் பதினாறு அடி உயரத்துக்கு எழுந்து விழுந்து நொறுங்கியது. திகுதிகுவென்று எரிந்த தீயில் தேடியபோது, பதினாறு காவலர்கள் இறந்திருந்தார்கள். ஒரே ஒரு அமெரிக்க சுற்றுலாப் பயணியும் பலியாகியிருந்தார்.

நல்லது. கார் குண்டு சக்திமிக்கதுதான். வெறும் குண்டுகளைக் காட்டிலும் இனி இதையே பயன்படுத்தலாம் என்று குண்டு வைத்த பிரகஸ்பதிகள் மேலிடத்துக்கு ரிப்போர்ட் கொடுத்துவிட்டு, விடுமுறைக்கு ஹாலந்து போய்விட்டார்கள்.

இ.டி.ஏ. மேலிடம் நடந்த சம்பவத்தை அறிவியல்பூர்வமாக கவனித்துக் குறிப்பெடுத்தது. ஒரு கார் வெடிக்கிறபோது எழுகிற சத்தமும் அதிர்ச்சியும் அழிவும் கணிசமானதுதான். சந்தேகமில்லை. ஆனால், இதை அடிக்கடி செய்ய முடியாது. பெரிய அளவில் காரியங்களைச் சாதிக்க நினைக்கும்போது மட்டும் பயன்படுத்தலாம். உக்ரைன் பயிற்சி உபயோகமானதுதான்.

சம்பவம் நடந்த சில மணி நேரங்களுக்குள் இ.டி.ஏ.வின் பல முக்கியப் புள்ளிகள் பிரான்ஸுக்குத்

தப்பிச் சென்றுவிட்டார்கள். சாதாரண சோல்ஜர்கள் அத்தனை பேரையும் மாறு வேடத்தில் போய்விடச் சொல்லிவிட்டார்கள். ஒரு வாரம், பத்து நாள் இ.டி.ஏ. இருக்குமிடமே யாருக்கும் தெரியவில்லை. இயக்கமே கலைந்து விட்டதோ என்று உளவு அதிகாரிகளே நினைக்குமளவுக்குப் பதுங்கியிருந்தார்கள். அதன்பின் மீண்டும் தத்தம் யதாஸ்தானங்களுக்கு வந்து ஜனநாயகக் கடமையாற்றத் தொடங்கினார்கள்.

ஸ்பெயின் முழுவதும் பயம் பற்றிக்கொண்டது. இது புதுசு. முற்றிலும் புதுசு. இ.டி.ஏ. தன் தாக்குதல் உத்திகளை இவ்வாறு நவீனப்படுத்திக் கொள்வது என்பது மிகவும் அபாயகரமானது. எத்தனையோ செய்ய முடிகிற அரசாங்கத்தால், இவர்களை ஏன் ஒன்றும் செய்யமுடியவில்லை? யார் என்பது தெரியும். எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியும். பாஸ்க் பிராந்தியம் முழுவதையும் சுற்றி வளைத்துச் சூறையாட முடியாதா என்ன?

மக்கள் நினைத்தது சரிதான். ஆனால், இ.டி.ஏ.வின் பதுங்கு தளங்களை அத்தனை எளிதில் நெருங்கிவிட முடியாது என்பதுதான் உண்மை.

பொதுவாக அவர்கள் நகர்ப்புறங்களில், கிராமப்புறங்களில், மலைப்பகுதிகளில், காட்டுப் பகுதிகளில், நதிக்கரையோரங்களில் தம் இருப்பிடங்களை வைத்துக் கொள்வதில்லை. வேறு எங்கே? அதுதான் சஸ்பென்ஸ். ஜேம்ஸ்பாண்டுகள் கண்டுபிடிக்க வேண்டிய விஷயம். தவிர, இ.டி.ஏ.வின் அதிகாரபூர்வ இருப்பிடங்கள் என்று போலீஸ் வட்டமிட்டுக் காட்டுகிற இடங்களிலெல்லாம் ஒரு டேபிளும் இரண்டு சேரும் மட்டும் இருக்கும். ஃபேன் ஓடும். பானையில் தண்ணீர் இருக்கும். யாராவது இரண்டு பேர் உட்கார்ந்து மங்காத்தா ஆடிக்கொண்டிருப்பார்கள். ஏதாவது சாரிட்டி அலுவலகமாக அது இருக்கும். தீவிரவாதம் அது இது என்று பேசிக்கொண்டு ரெய்டு, கிய்டு போனால் பெப்பெப்பே என்று விழிப்பார்கள். உண்மையிலேயே அங்கிருக்கிறவர்களுக்கு எதுவும் தெரியாது என்பதுதான் விஷயம். அவர்கள் தபால் பரிவர்த்தனைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் வேலைக்காரர்கள். அவ்வளவுதான்.

எனில், இ.டி.ஏ. தலைகள் எங்கே இருக்கும்? பிரான்ஸில்? ஸ்பெயினிலும் பிரான்ஸிலும்தான் அவர்கள் வசிக்கிறார்கள். இதில் சந்தேகமில்லை. ஆனால், பெரும்பாலும் அவர்களது இருப்பிடம் யாருக்கும் தெரியாது. பல உளவுத்துறை அதிகாரிகளின் ரிப்போர்ட்டுகளை திரும்பத் திரும்ப வாசித்துப் பார்த்துத் தேடினாலும் அகப்படுகிற விஷயம் ஒன்றுதான்.

இ.டி.ஏ.வின் பெரும்புள்ளிகளும் சிறு புள்ளிகளும் தமக்கென்று பதுங்கு தளங்கள் அல்லது அலுவலகங்கள் என்று எதையும் வைத்துக் கொள்வதில்லை! மக்கள் புழங்கும் எல்லா இடங்களிலும் சாதாரணமாக அவர்களும் புழங்குவார்கள். ஒரு ஹோட்டலிலோ, டீக்கடையிலோ சந்தித்துப் பேசக்கூடும். அல்லது தேவாலயங்களில். பிற பொது இடங்களில். வேலை முடிந்ததும் தத்தம் வீடுகளுக்குப் போய்விடுவார்கள். எல்லாரைப் போலவும் வீடு. எல்லாரைப் போலவும் ஆபீஸ்! அவர்கள் இ.டி.ஏ. உறுப்பினர்கள் என்பது இயக்கத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும்தான் தெரியும். மற்றபடி அல் காயிதா மாதிரியோ, ஹமாஸ் மாதிரியோ, ஹிஸ்புல்லா மாதிரியோ, ஆபீஸ் வைத்து, நிரந்தரமான பயிற்சி முகாம்கள் அமைத்து, இங்கேதான் இருக்கிறார்கள், இந்த நேரத்தில் இன்ன செய்வார்கள் என்று இடம் சுட்டிப் பொருள் விளக்கும் விதத்திலோ, அவர்கள் நடந்து கொள்வதே இல்லை.

இதனால்தான் கொத்துக் கொத்தாக இ.டி.ஏ.வினரைக் கைது செய்வதோ, முகாம்களைத் தேடி அழிப்பதோ முடியாத காரியமாக இருக்கிறது. ரகசிய ஆயுதக் கிடங்கு, பதுங்கு தளங்கள் உண்டு. அதையும்கூட குறிப்பிட்ட கால இடைவெளியில் மாற்றிக்கொண்டே இருப்பார்கள். முன்பே பார்த்ததுபோல், கழற்றி ஒரு கோணியில் போட்டு மூட்டை கட்டி எடுத்துப் போகிற ரெடிமேட் வீடுகள்தான் அவர்களிடையே அதிகப் புழக்கம். மிக நீண்ட காலத் தேடுதல் வேட்டைக்குப் பிறகுதான், இந்த விஷயம் ஸ்பானிஷ் போலீஸுக்கே தெரிய வந்தது. வெறுத்துப் போய்விட்டார்கள்.

அதன் விளைவு, இ.டி.ஏ.வின் அடுத்த குண்டு வெடிப்பு ஒன்றில் சம்பந்தப்பட்டு, கைதான தீவிரவாதி ஒருவன் அகப்பட்டபோது, கடுப்பில் 1,401 வருஷ ஜெயில் தண்டனை கொடுத்தார்கள்! (கவனிக்கவும் மரண தண்டனை கிடையாது!)

1986 ஜூலை 14-ம் தேதி தனது இரண்டாவது கார் குண்டுத் தாக்குதலை வெற்றிகரமாக நிகழ்த்தியது இ.டி.ஏ. மாட்ரிட் நகரில் உள்ள ரிபப்ளிகா டொமினிகானா சதுக்கத்தில் வைத்து இந்தக் காரியத்தைச் செய்தார்கள். இம்முறை இன்னும் பெரிய கார். இன்னும் பெரிய சிலிண்டர். மேலும் சக்தி வாய்ந்த குண்டு.

போலீஸ் பயிற்சிக் கபார்சிலோனாவில் ஒரு சூப்பர் மார்க்கெட்டின் கார் பார்க் பகுதியில் ஒரு சம்பவம். போலீஸ் குவார்ட்டர்ஸ் பகுதி ஒன்றில் ஒரு கா.கு. அதே போலீஸ் குவார்ட்டர்ஸை ஒட்டியிருந்த பயிற்சிப் பள்ளி வளாகத்தில் ஒரு கா.கு. நட்ட நடுச் சாலைலூரியில் படித்துக் கொண்டிருந்த இளம் காவலர்களை ஏற்றிக் கொண்டு போன ஒரு மினி பஸ்ஸைக் குறிவைத்து நிகழ்த்தப்பட்ட தாக்குதல் அது. குண்டு வைக்கப்பட்ட காரை அந்த பஸ் கடந்த கணத்தில் வெடிக்கச் செய்தார்கள். பஸ்ஸில் மொத்தம் அறுபத்திரண்டு பேர் இருந்தார்கள். அதில் பன்னிரண்டு பேர் உடனடியாக இறந்தார்கள். மற்ற அத்தனை பேரும் குற்றுயிரும் குலை உயிருமாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். பிராந்தியமே அடுத்த ஒரு சில மணி நேரங்களுக்கு ரணகளமாகிப் போய்விட்டது. ஒரே கூச்சலும் குழப்பமும் அலறலுமாக, நிலைமை கட்டுக்கு வரவே வெகுநேரமானது.

இ.டி.ஏ.வுக்கு இந்த உத்தி மிகவும் பிடித்துவிட்டது. கார் குண்டு. அடடா, என்ன ஒரு கண்டுபிடிப்பு! ஹமாஸுக்கு மனத்துக்குள் நன்றி சொல்லிக்கொண்டார்களோ என்னவோ! தனது அடுத்தடுத்த தாக்குதல்களில் பெரும்பாலானவற்றை கார்கள் மூலமே அவர்கள் நிகழ்த்தினார்கள்.

லயொன்றில் ஒரு ராணுவ லாரியைக் குறிவைத்து ஒன்று. ஒன்றில் இருநூறு கிலோ. அடுத்ததில் இருநூற்றைம்பது. மூன்றாவதில் நூற்றைம்பது கிலோ. என்னவோ கல்யாணத்துக்கு கோயம்பேடில் காய்கறி கொள்முதல் செய்வதுபோல வெடிமருந்து கொள்முதல் செய்து, கார் காராக ஏற்றி அனுப்பிக் கொண்டே இருந்தார்கள்.

எண்பதுகளில் ஸ்பெயினில் நிறைய கார்கள் வெடித்தன. அனைத்தும் இ.டி.ஏ.வின் திருப்பணி. அரசாங்கம், காவல் துறையையும் துணை ராணுவத்தின் ஒரு பகுதியையும் விடாமல் துரத்தித் துரத்தி இ.டி.ஏ.வை அடக்க முயற்சி மேற்கொண்டது. பாஸ்க் மாகாணத்தில் தினசரி ரெய்டு இருக்கும். இண்டு இடுக்கு விடாமல் புகுந்து தேடத்தான் செய்வார்கள். சந்தேக கேஸ்களாக பல நூற்றுக்கணக்கானவர்களைக் கொத்திக்கொண்டுபோய் விசாரிப்பார்கள். உருப்படியாக நாலு வரித் தகவல் கூட அகப்படாது.

ஜனநாயகத்தின்மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட தேசம் ஸ்பெயின். பேச்சுவார்த்தைகளுக்கு எப்போதும் அவர்கள் தயார். ஆனால், பிரிவினைவாதிகள் விஷயத்தில் விட்டுக் கொடுக்கும் உத்தேசம் ஏதுமில்லை. ஆனால், சில தாற்காலிக சமரசங்களுக்கு அவர்கள் எப்போதும் தயாராகவே இருந்தார்கள்.

இ.டி.ஏ. எத்தகைய மாற்று ஏற்பாடுகளுக்கும் தான் தயாரில்லை என்று சொல்லிவிட்டது. அடைந்தால் தனி பாஸ்க் தேசம். அடையும் வரை ஸ்பெயினில் வெடித்துக் கொண்டே இருப்போம்.

1995-ம் ஆண்டு ஒரு பெரிய காரியத்துக்குத் திட்டமிட்டார்கள். ஸ்பெயினின் மன்னரையே போட்டுத்தள்ளும் திட்டம் அது. ஏழெட்டு இதழ்கள் முன்னர் பார்த்தோமே, அந்த ஜான் கார்லோஸ் ஒண்ணு!